குயில்

கிழமை இதழ்
ஆசிரியர்
பாரதிதாசன்
விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 3—3—59 செவ்வாய் | இசை: 39

5-2-59ல் புதுவையில் நடைபெற்ற
புலவர் **குமாரசாமி** அவர்களின் பாராட்டு விழாவில்
பாவேந்தர் **பாரதிதாசனார்** தலைமையுரை நிகழ்த்துகின்றார்

பாவேந்தரின் வலப்பக்கம், தமிழக முதலமைச்சர் திரு, காமராசனார்,
புதுவை ஆலயுடையவர் சென்னியப்பர்,
மருணீக்கியார் (டாக்டர்) ஏ. கிருட்டினசாமி எம். பி.
இடப்புறம்: புதுவைக் காங்கிரசு தலைவர் வேங்கடசுப்பா ரெட்டியார்,
புலவர் குமாரசாமி காண்க.

5-2-59ல் புதுவையில் நடைபெற்ற புலவர் குமாரசாமி அவர்களின் பாராட்டுவிழாவில் பாவேந்தர் பாரதிதாசனார் முடிவுரை நிகழ்த்துகின்றார்.

தமிழக முதலமைச்சர் திரு, காமராசனார், சென்னியப்பர், மருணீக்கியார் கிருட்டிணசாமி, எம். பி. அறுவை வாணிகர் வி. கே. பழநிசாமிமுதலியார், நூல்வாணிகர் சேனாபதிமுதலியார் காண்க.

கீழ்க்கண்ட ஊர்களுக்குக் குயில் விற்பனையாளர் தேவை

மதுரை — நெய்வேலி
பண்ணுருட்டி — திண்டிவனம்
விருத்தாசலம் — விழுப்புரம்
செங்கல்பட்டு — தாம்பரம்

விவரங்கட்கு :—

அமைச்சர்,
'குயிலகம்' புதுச்சேரி.

புதுச்சேரி. தி. வ. ஆ. ௧௯௯௦ மாசி ௧௯

தந்தை வந்தார்!

<✱>

சென்னையினின்று பிப்ரவரி ஒன்றில் புறப்பட்டார் பெரியார். எதை நோக்கி? ஆரிய நாட்டை, நேருவின் வீட்டை நோக்கி.

ஆரிய நகரங்கள் அனைத்திலும் சீரிய–நேரிய வரவேற்புப் பெற்றார் பெரியார்.

ஐதராபாத்தில் தங்கினார், நாக்பூரில் தங்கினார், சான்சியில்தங்கினார் பெரியார். அங்கங் கிருந்த தமிழ் நாட்டவர் பெரியாரை வரவேற்று அன்பு காட்டியதில் வியப்பில்லை. உள்ளூர்த் திருவாளர்கள், வெள்ளம்போற்கூடி வரவேற்று இன்றைய இந்திய அரசியல் முரசு கிழிந்து வருவதற்குள்ள காரணத்தையும், மக்கள் கைக் கொள்ளவேண்டிய தோரணத்தையும் கேட்டு நல்லுணர்வு பெற்றனர் என்றால் அதுதான் வியப்பு

அதன்பின் கான்பூருக்குப் பெரியார் ஏன் போகமாட்டார்? லக்கனோ பெரியார்க்கு என்ன சுக்குநீரா? – இரண்டு பெருநகரங்களிலும் இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் பெரியார்க்கு நடத்தியது ஊர்வலம் அன்று. அது பார்வலம்!

பெரியார்க்கு அன்பு கனிந்த வரவேற்பு அளித்தனர். அதே நேரத்தில் நேருக் கூட்டத்திற்கு அங்கலாய்ப்பு அளித்தனர். குடியரசுக் கட்சியின் சார்பில் ஏற்படுத்தப்பட்ட பொதுக் கூட்டம் ஒன்றல்ல, பல. அக் கூட்டங்களில் கலந்துகொண்ட மக்கள் தொகை ஓராயிரக் கணக்கல்ல – நூறாயிரக் கணக்கு. ஐயாவின் அறிவுரைப் பெருக்கு நெஞ்சின் புத்துருக்கு! சொல் ஒவ்வொன்றும் வறுமை அகற்றும் தங்கக்கட்டி! எதிரிகளைச் சிதறடிக்கும் சிங்கக் குட்டி.

இருட்டறைக்குத் திறப்புத் தாழ். குருட்டு நோய் தெருட்டு மருந்து – உண்மை கருத்துப் பெற்ற மக்கள் அனைவரும் அவைகளைப் பெறாத நாள் எல்லாம் நாங்கள் பிறவா நாள் என்றாரன்றோ?

மருணீக்கியார் (டாக்டர்) அம்பேத்காரையும் நாங்கள் இழந்தோம். தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட பெருந் தொகையினராகிய எமக்கெல்லாம் தலைவர் நீங்களே, சார்ந்து கடைத்தேற எண்ணுவோர் நாங்களே! – இப்படியல்லவா செதுக்கி முடித்தது ஓர் செப்பேடு!

அறிவு பொருளாகச் சொற்பொழிவு நிகழ்த்தும் ஆற்றல்கண்ட லக்கனோ பல்கலைக் கழகம் பெரியார் திருமுன் ஓர் அழைப்பைப் படைத்தது. அங்கணும் சென்று ஆனேறு பொழிந்தது தேனாறு.

சாதி ஒழிப்பின் இன்றியமையாமையை நன்று விளக்கி அந்தப் பாழுங்கிணற்றினின்று மீளும்படிக்குள்ள வழிவகை இன்னதென்றும் பன்னிப்பன்னி உரைத்தருளினார் தந்தை பெரியார்.

அங்கு எல்லாக் கூட்டங்களிலுமே தாழ்த்தப்பட்ட மக்கள் தன்மானம் என்னும் உயிரை இழக்காதிருக்க இந்து மதத்தை விட்டு வெளியேறிப் புத்தநெறியைத் தழுவவேண்டும் என்பதை வலிவுறுத்தியே சென்றார்கள்.

இவ்வாறு பெரியார் வலியுறுத்தினால் கிலி யுறுத்தாமல் இருக்குமா இந்து மகா சபை யினரை! என்ன அவர்கள் செய்தார்கள்? – பார்ப்பன மாணவர்களைத் தூண்டிவிட்டு கலவர வேட்டுக்கு நெருப்பு வைத்தார்கள். ஆனால் பிசுபிசுத்துப் போனது.

மேலும் நம் பெரியார் என்ன செய்தார்? வீட்டுக்கா கம்பி நீட்டினார்? ஓட்டினார் வண்டியை உத்தரப் பிரதேசம் நோக்கி! நேருவின் மாநிலத்தை நோக்கி!

ஆட்சியிலிருக்கும் அரசியலாரின் கொடுமைகளை அகர வரிசையாக விளக்கினார். மறைவாக அன்று. வெளிப்படையாக. மெல்ல அன்று குரல் எடுத்து. இரண்டுபேர் முன்னல்ல, எண்ணித்தொலையாப் பெருமக்கள் முன்! அப்படியே அங்கேயே கையோடு பெரியார் பெற்றுப் பையோடு கொண்டுவந்த பொருள் என்ன? சாதியொழிப்புக்குத் தக்க ஆதரவு நாட்டின் மீட்சிப் போராட்டத்திற்கு நல்ல ஒத்துழைப்பு. இந்த இரண்டு கோடி வெண் பொற்காசுகளே.

இந்திய யூனியன் தலை நகரிலும் (புதுத் தில்லி) பல கூட்டங்களில் உற்றதம் கருத்துக்கு வெற்றிமுரசு முழங்கி அம்பாய்ப் பாய்ந்தார் பம்பாய் மாநிலம்.

பம்பாயில் பல, எம். பீ. க்களும் தமிழர்களும் அரசியல் கணக்கரும், அன்புடன் வரவேற்று நலஞ் செய்தனர். பெரியாருக்கு! அங்கும் தந்தையார் அறிவுரை ஆற்றுகையில், கடவுள், மதம், சனநாயகம் (மக்களாட்சி) என்ற பேய்களையும், பார்ப்பன ஏடுகளையும் அரசியல் கட்சிகள், சட்டமன்றப் பித்தம் சினிமா முதலிய தொத்து நோய்களையும் ஒழித்துக் கட்டிப் பார்ப்பான் - பறையன் ஒழிந்த ஒருநிலைப் பெருமக்கள் அமைந்த நிறுவனத்தை நிறுவவேண்டும் என்பதை வலியுறுத்தியருளினார். அவ்வாறு பெரியார் வலியுறுத்தியது பயன் அளித்ததா?-கைமேல்,

அரசியல் கணக்கர் பலர், பெரியார் வழிநிற்பதாக உறுதி கூறினார் அன்றோ!

வெறுங் கையோடு திரும்பினாலும் விரும்பி எதிர் கொண்டு வாழ்த்தி வரவேற்கும் - தமிழராகிய நாம், வெற்றிக் கொடியைத்தூக்கி வரும் பெரியாரை 1-3-59 சென்னை திருவல்லிக்கேணியில் வரவேற்காமல் தூங்கவாபோகின்றோம் வரவேற்புப் பொதுக் கூட்டத்தில் அவரிடம் எதிர்பார்க்கும் வடபுலச் செலவு விரிவைக் கேளாது வாளாயிருக்கவா முடியும்!

★○★

வெளிவராச் செய்தி

வெளியிட முடியாவிட்டால் திருப்பி அனுப்புக என்று கூறுகின்றவர்கள்

திருப்பி அனுப்புவதற்குரிய அஞ்சல் தலை அனுப்பவேண்டும்.

– ஆசிரியர்



பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி உஅ

இடம்: சோழநாட்டின் புறத்தே ஓர் ஆலடி.

காலம்: முதுமாலை.

உறுப்பினர்: கோப்பெருஞ்சோழன், சோழ மன்னி, புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார், அமைச்சன், படைத்தலைவர், ஆட்கள், புலவர் பொத்தியார், சான்றோர்.

காட்சித் தலைப்பு:

அறத்திற்குப் புத்துயிர் அளிப்பேன்

நிகழ்ச்சி: கோப்பெருஞ்சோழன் ஆலடியில் நிற்க, அவனடியில் மன்னிகிடக்க ஆட்கள் தரையில் மண்டியுள்ள முட்செடிகளை வெட்டி மட்டம் செய்கின்றார்கள்.

அமைச்சன்:

துன்பத் தலைமுளை தோய்ந்திலா மன்னரே
முன்புறம் ஆடி அசையும் முழுத்தோல்
பின்புறத் தாட்டுவான் பெருந்திறத் தால்ஆம்
பின்னை அரசு நடத்த நீவிர்
உள்ளிருந் துள்ளம் உதவ வேண்டாவோ
வடக்கி ருத்தல் அடுத்தோ
விடுத்தல் வேண்டும் மன்னிக் குலர்தரவே.

சோழன்:

அவரும் பாடினர் இவரும் பாடினர்.
இருவர் பாட்டினுள் வேறுபா டென்எனில்,
அவர்நற் பாட்டில் அறமே கண்டேன்
அரசுக் குரியவர் அரச மக்களே
அன்னவர் மன்னனின் பகைவ ரல்லர்.
அவரைக் கொன்றபின் ஆட்சி எவர்க்(கு)ஆம்?
என்ற புலவர் இனிய செய்யுள்
காட்டிய அறமே கடைப் பிடித்தேன்
அமைச்சர் பாட்டில் அறமே காணேன்
அமைச்சரே நான் உமக் கறிவித்தபடி
இதுவரை ஏதும் இயற்ற வில்லையா?
இந்த நாட்டில் அறமே இறந்தது
புத்துயிர் அளிக்க இத்தகு முடிவு
செய்தேன். உமக்கிதைத் தெளிவுறச் சொன்
[னேன்
என்னைப் போலவே என்முன் னோர்கள்
அறம்பெரி துயிர்பெரி தல்ல என்று
வாழ்ந்தனர் அவருடல் இந்த மண்ணில்
கலந்தது! நிறைந்த ஆயுள் கண்டே
இறப்பு வரும்போதும் வீரம் இறவா
எண்ணிலாச் சோழர் இறந்தனர்
எனில் உடல் இந்தமண்ணிற் கலந்தது
சோழ நாட்டில் நிறைந்த பூழ்தியின்
அணுஒவ் வொன்றும் வீரமே ஆனது
என்னும் இந்த உண்மை யாவற்றையும்
உலகுக்கு நினை வூட்ட எண்ணியே
பாண்டி நாடுமுதல் பன்னாடு கட்டும்
என்னிலை இயம்பு மாறு செய்க
என்றேன், ஏன்செய்யா திருந்தீர்?

அமைச்சர்:

ஆணை எப்படி? அப்படிச் செய்துளேன்
மறப்பவன் நானோ மறுப்பவன் நானோ?

சோழன்:

எனவே என்பிசி ராந்தை யார்க்கும்
இந்நேரம் என்நிலை எப்படி யிருக்குமா?

அமைச்சர்:

ஏந்தலே இதிலும் ஐயம் எதற்கு?

சோழன்:

வடக்கிருக்க வாய்ப்பான இடம்
எனக்கொன்று மனக்கோட்ட மிலாப்
பிசிராந் தைக்கொன்று வேண்டும்
அசதி வேண்டாம் ஏவலாளரே.

உனக்குமா ஓர் இயக்கம்?

உனக்குமா ஓர் இயக்கம்? — அதைக்
கலைக்க என்ன தயக்கம்?
இனக் குறையை நீக்கப் பெரியார்
இயக்கம் நாட்டில் இருக்கையிலே
உனக்குமா ஓர் இயக்கம்?

தமிழ்நா டென்று பேர்வை என்றால்
வரலா றில்லை என்றான்
நமை இகழ்ந்தான் நாக்கறுக்க
நம்பெரியார் இயக்கம் இருக்க
உனக்குமா ஓர் இயக்கம்?

காங்கரசுக் காரா — உனக்குத்
தமிழன்என்று பேரா?
தீங்கிழைக்கும் தில்லி காலைச்
சேருவதும் உன் சீரா?
உனக்குமா ஓர் இயக்கம்?

தனியுடைமை பழித்தாய் — இது
வரைக்கும் என்ன கிழித்தாய்?
இனிய தமிழை அழிக்கும் தில்லியை
ஏத்தி வாலைக் குழைத்தாய்
உனக்குமா ஓர் இயக்கம்?

பார்ப்பானுக்குப் பிள்ளை — நீ
தமிழர் நலத்தில் நொள்ளை
பார்ப்பான் கொள்ளை தனில்அசைக்க
முடியுமா ஓர் எள்ளை
உனக்குமா ஓர் இயக்கம்?

செட்டுத் தமிழர் நெல்லைச் — சேர்த்தான்
மலையாளத்தின் எல்லை
கொட்டம் அடிக்கும் ஆட்சித் தொல்லை
குறைக்கஉன்னால் ஆவ தில்லை
உனக்குமா ஓர் இயக்கம்?

தமிழரசி கூலி! — இங்கே
உனக்கு மென்ன சோலி?
தமிழ் ஒழிப்ப னோடுகூடி
தமிழைச் செய்தாய் கேலி!
உனக்குமா ஓர் இயக்கம்?

தமிழ்ப்பெருமை துணித்தான் — இந்தி
தமிழகத்தில் திணித்தான்
நமை இகழ்ந்தான் நாக்கறுக்க
நம்பெரியார் இயக்கம் இருக்க
உனக்குமா ஓர் இயக்கம்?

நாம் தமிழர் தானா — இல்லை
நல்ல தலைக்குப் பேனா
ஏந்தியகை இட்டகையை
ஒடிப்பதுவே கொள்கை ஆனால்
உனக்குமா ஓர் இயக்கம்?

சான்றோரில் ஒருவர்: நோற்றலில் நிகரிலா ஆற்றல் உமக்குண்டு. பிசிராந்தையார்க்கு அவ்வாற்றல் ஏது? அவர்க்கும் உமக்கும் என்ன தொடர்புண்டு? யாம் கண்டதில்லை. கேட்டிருக்கின்றோம் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனரிடம் மிக்க மதிப்பு வைத்திருக்கின்றார் என்று! கெட்டபோது நாட்டாரும் கைவிடுவார் என்பதும் அறிவோம். மன்னர் வடக்கிருக்கும்போது என்ன கருதி அவர் வருவார்? வந்தாலும் எதற்காக உம்முடன் வடக்கிருக்க ஒப்புவார்?

சோழன்: சான்றோரே நிறுத்துங்கள். கேளுங்கள். பாண்டி நாடு அங்கே சோழநாடு இங்கே. இடைவெளி மிகப்பெரிது ஆயினும் அவர்என்னுடன் உறைவோரே. அவர்எனக்குச் செல்வங் கொழிக்கு நாளில் வாராது நிற்பினும் நான் அல்லல் அடையும் இக்காலத்து வாரதிரார்.

மனையோள் மடமை

சென்னை, வே. தில்லைநாயகம், எம். ஏ.

கண்ணுற் பேசிக் கருத்தை ஈர்த்துக்
காதல் வளர்த்துக் கடிமணங் கொண்ட
காதலர் இன்பக் காலப் போக்கில்
தன்னை மறந்து தவிக்க விட்டுக்
காதற் பரத்தை கண்ட நிலையைத்
தோழி மூலம் தெரிந்த தலைவி
ஆத்திரப் பட்டாள். அவசரம் பூண்டாள்.
காதற் கணவனைக் கவ்விக் கொண்ட
பரத்தை யவளைப் பழிக்கும் முறையில்
பல்வகை முறையில் பாரோ ரறிய
ஏசித் தீர்த்தாள், ஏக்கம் கொண்டாள்!
கணவனை அணைத்துக், காதற் பரத்தை
மறக்கச் சொல்லி மனம்விட் டோடினள்.
ஊடிய பின்னர் கூடில் பெற்றுத்
தவறை யுணர்ந்த தலைவன் அவனும்
அஞ்சிய ஆமையாய் அயர்ந்து கிடந்தான்
செய்தி யறிந்த செஞ்சொற் பரத்தை
"அக்காள் முறையாம் அழகிய தலைவி
அவசரப்பட்டே, ஆத்திரம் பொங்கி
ஏசிப் பேசி இழித்துக் கூற
எந்த முறையிலும் இழுக்காய் யானும்
இருக்க வில்லை" என்றே பேசினள்!
"தின்னத் தின்னத் தெவிட்டா மாங்கனி
தானே பழுத்துத் தளர்ந்த நிலையில்
நீரில் விழுக நெருங்கிய வாளை
ஆசை தீர அதனை உண்டால்
அதனை யாரும் ஆகா தென்பரோ?
அந்த முறையே அடியாள் நானும்
கண்ணால் வளைத்த காளை யவரை
கண்டேன். பேசினேன். கட்டி யணைத்தார்;
காதல் பெருக்கிக் களித்து உவந்தோம்;
இஃதே யுண்மை; இதனை விட்டு
வீணே என்னை விலக்கிப் பேசி
ஏசுவ தேனோ ஏந்திழை அக்காள்!
தவறுகள் இருந்தால் தாக்கும் அணங்கு
தவறு தென்னை தண்டிக் கட்டும்!
மாண்பு மிக்க மங்கையர் திலகம்
மடமையிற் புலக்கும் மாளாத் திஞ்சொல்
தவர்க!" என்றே தானும் பேசி
உண்மை நிலையை உறுத்திக் காட்டி
சிறப்புப் பெற்றாள் செவ்விய பரத்தை!
காதற் கணவன் காதலி விட்டுக்
காதற் பரத்தை காணப் போவதும்
உண்மை யுணர்ந்த உரிமைத் தலைவி

வெல்க! அவர்படை வெல்க!

ப. பாலகிருட்டினன், மன்னம்பாடி.

எடுப்பு

ஏனின்னும் வரக்காணேன் – தோழி!
என்னிலும் அவர்க்கங்கே எப்பொருள் விருப்பமடி!
(ஏனின்னும்)

உடனெடுப்பு

கூனிக் குறுகிட குளிர்வாடை வீசுதே
குளிர்காய அன்னவர் தோள்நினை வூட்டுதே!
(ஏனின்னும்)

அடிகள்

மங்கை ஒருத்திதரும் சுகமும் – எங்கள்
மாத்தமிழ்க் கீடோ எனவும் – சொன்ன
தங்கத் தமிழ்க்கவிதை உணர்வும் – இந்தி
தடைசொல்ல வைத்ததோ தோழி! (ஏனின்னும்)

பெற்ற நம்தாய்த்திரு, நாட்டைச் – சில
பேடிகள் ஆண்டிடும் கேட்டை – அவர்
வெட்டிப் பிரிந்திட வேண்ட – சிறை
வெங்களம் சென்றாரோ தோழி! (ஏனின்னும்)

கொல்லும் படைக்கஞ்ச மாட்டார் – அவர்
கொள்கைத் திறத்தினர் தோழி – உண்மை
சொல்லிப் பிரிந்திடில் சோகம் – என்னைத்
தூளாக்க! வேறெங்குச் சென்றார்! (ஏனின்னும்)

வெல்லத் தான்போயங் கிருப்பார் – அவர்
வென்றால் தான்வீட்டை மிதிப்பார் – தமிழ்
வெல்க! அவர்படை வெல்க – உண்மை
வெல்லும்! வெண்தாடியே வெல்லும்! (ஏனின்னும்)

<★>

கணவன் தன்னை கடிதே பேசித்
தவறைத் திருத்தி தானும் வாழும்
நற்றமிழ்ப் பண்பை நல்ல குறுந்தொகை
மாங்குடி மருதனின் மாண்புறு சொல்லால்
ஆறே வரிகளில் அழகாய்ச் செப்பும்
இன்பம் காணீர், இனிக்கும் நந்தமிழ்!
"கணைக்கோட்டு வாளை கமஞ்சூல் மடநாகு
துணர்த்தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தண்பெரும் பவ்வம் அணங்குக தோழி
மனையோள் மடமையிற் புலக்கும்
அனையே மகிழ்நற்கியா மாயினம் எனினே."

செந்தமிழர்நிலை பாராய்தோழி!

காரை, கோ. பாரதி

திருநிகர்க்கும் ஒளியணிகள் பூண்டிருக்கும் தோழி
நீந்தமிழோர் நிலையின்று சொல்லுகிறேன் கேளாய்
பெரும்படையும் எதிர்த்துவரின் அஞ்சாது நின்று
போர்முரசு கொட்டியிந்தப் பூமிதனைக் காத்த
அருமன்னர் ஆண்டிருந்த செந்தமிழர் நாடும்
அகிலமெங்கும் பேர்பெற்று விளங்கியதாம்முன்னாள்
தருக்குரைத்த கனகனுமே விசயனுமே அன்று
தமிழ்மன்னன் எதிர்நில்லா(து) ஓடிஒளிந் தாரே

செந்தமிழன் படைகண்டு கலிங்கத்து மக்கள்
செல்லுந்திசை அறியாது விழிபிதுங்க நின்றார்
அந்ததிரு வழிவந்த அருந்தமிழர் இன்று
அயலிடத்தில் கைகட்டி பொருள்கேட்டு நிற்றல்
பொந்தினிலே வாழுகின்ற எலிமுன்னே வேங்கை
புகழ்ச்சிபல பேசிபொருள் கேட்பதையே ஒக்கும்
விந்தையிலும் விந்தையாக இருக்குதடி தோழி
வென்றமிழர் வாழுகின்ற முறைமைதனைப் பார்க்க

படித்திருந்தும், பட்டங்கள் பெற்றிருந்தும் என்ன
பாரோச்சும் வழியனைத்தும் அயலிடத்தில் தானே
மடக்கவரி மான்மயிரை இழந்துவிட்டால் உடனே
பிழைக்காது; உயிர்நீக்கும்; அவ்வழியில் வந்தோர்
இடிவீழ்ந்த மரம்போலச் சாய்ந்திடவே நாட்டை
இரக்கமிலா வஞ்சகர்கள் ஆளுகின்றார்; தமிழன்
அடிமையுற்றுத்தாள்பணிந்து வாழுகின்றான்வெட்கம்
அறிவிளக்கம் என்றவன்தான் அறிவானோ
அறியேன்

செல்வமகள் செருமுனையில் புறமுதுகு காட்டி
சென்றோடி விட்டானென வீரர்களும் சொல்ல
நல்வழியில் பெற்றெடுத்த என்மகன்தான் போரில்
நில்லாது புறமுதுகில் காயம்பட்(டு) இருந்தால்
நல்வீரப் பால்கொடுத்த கொங்கைகளை அறுத்து
நாயினுக்கு எறிவேனென வஞ்சினங்கள் கூறி
நில்லாது செருமுனைக்குச் சென்றுமகிழ் கொண்ட
நற்றமிழ்தாய் வாழ்ந்ததிரு நல்லமுத நாடு

இன்றிருக்கும் நிலையென்ன எண்ணிப்பார் தோழி
ஈனக்குடி வடவர்கீழ் வாழ்வதுதான் முறையோ
அன்றிருந்த செல்வங்களை அழித்ததோடல் லாமல்
ஆவின்பால்சுவைநிகர்க்கும்இலக்கியங்கள்கொண்ட
தென்றமிழின் வாழ்வீற்கும் வந்ததுவே இன்று
தீயும்நிலை; இதைக்கண்டும் திருந்தாத இவரோ
இன்றமிழன் எனசொல்வார்; இவர்மாண்பு பேச
என்நாவும் எழுந்திடவே மறுக்குதடி தோழி.

தமிழ்ச் சிந்து!

புலவர் புதுமதியன், புதுப்பாளையம்.

தூக்கம் தெளிந்திடு தம்பி - இள
நம்பி - உன்றன்
துணையாகிய விழி நீக்கியே
துயர் போக்கிடு குறைமாற்றிடு
துடித்தெழுவாய் இளந்தம்பி - துயர்
தொலைத்திடவே மனம் வெம்பி!

ஊக்கம் பிறந்திடவேண்டும் - மனந்
தீண்டும் - தமிழ்
உயர்வாகிட, உருவாகிட
உடனேஎழு, உறைவாளெடுத்(து)
ஓட்டிடுவாய் இந்திமீண்டும்! - அதை
ஒழித்திடுவோம் உயிர்மாண்டும்!

ஆக்கங்கள் செய்தமிழ்த்தாய்க்கே! இந்தி
நாய்க்கே - தடி
அடியேகொடுத் துயிரையெடுத்(து)
அடியோடொழித் திடலேமிக
அழகிதுவாந்தமிழ்ச் சேய்க்கே-பேசற்கு
ஆனசுவைச்செய்தி வாய்க்கே!

தூக்கிடு தோள்களை நீவிப் - பகை
சீவிப் - புகழ்
தொலையாதெழில் திகழும்உயர்
தமிழ்நாடிதில் உயர்வாகிடத்
தொழுதிடுவாய் தமிழ்த்தேவி - அவள்
தமிழர்உடல் பொருள் ஆவி!

தமிழர்க்கு...!

இரா. அரங்கநாதன், நயனூர்மண்டபம்.

பாட்டுக் கினியநம் பைந்தமிழ்க் கிந்தியால்
வேட்டுவைக்க எண்ணியுளார் வீணர்கள்—காட்டுச்
சிறுத்தையே நீயச் சிறுக்கியைத் தூர
வெறுத்தொதுக்கித் தள்ளி விடு!

நந்தமிழ்க் கேயெதிராய் நாதியிலா இந்தியெனும்
நொந்தமொழி இங்கே நுழைகுவதோ-செந்தமிழா
வீதியினி லோடும் வெறிநாய்க்கொப் பானவளைத்
தூதூ வெனக்காரித் துப்பு.

தமிழில் வடசொற்கள் பற்றிக் கால்டுவெல்

கயல்விழி

தமிழ் மொழி வடமொழியினின்று பிறந்தது என்னும் எச்சொல்லையும் ஆய்ந்தறியாமல் அது வடசொல்லே என்றும், தமிழில் வட சொற்கள் கலந்தால்தான் தேனும் பாலும்போல இருக்கு மென்றும், கூறிவரும் வந்தேறிப் பார்ப்பனர்களுடைய வாயில் ஆணி அறைந்து அடக்கியவர் கால்டுவெல். அவர் இயற்றிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் உயரிய ஆய்வு நூலிற் காணப்படும் கீழ்வரும் உரைகொண்டு தண்டமிழ் மொழியை இடித்துரைக்கும் எவரையும் வாயடக்கித் தாய்மொழிப் பற்றினை நிலை நாட்ட நன்குதவுமென எண்ணி உங்கள் முன் வைக்கிறேன்,

1. வடமொழியில்ருந்து திராவிட மொழிகள் பிறந்தன என்னும் கொள்கைக்கு மறுப்பு.

No person who has any acquaintance with the principles of comparative philology, and who has carefully studied the grammars and vocabularies of the Dravidian languages, and compared them with those of Sanskrit, can suppose the gramatical structure and inflexional forms of those language and the greater number of their more important rools capable of being derived from sanskrit by any process of development of corruption whatsoever. (A comparative Grammar of the Dravidian Languages, P. 42)

ஒப்பிலக்கணத்தின் உண்மைகளைத் தெரிந்த எவரும் திராவிட மொழிகளின் இலக்கண அமைதிகளையும் சொற்றொகுதிகளையும் வடமொழி இலக்கண அமைதிகளோடும் சொற்றொகுதிகளோடும் ஒப்பிட்டுப் பார்த்தபின், அவை எக்காரணத்தைக் கொண்டும் ஒன்றற் கொன்று உறவுடையன என்றோ வடமொழியிலிருந்துதான் திராவிட மொழி இலக்கண அமைப்பும் சொல்லாக்கத் திரிபுகளும் தோன்றியிருத்தல் வேண்டுமென்றோ கூற முன்வரமாட்டார்கள் என்பது திண்ணம்.

Whatever probabilities may be in favour of the hypothesis now mentioned, the oldest sopposition of the direct derivation of the Dravidian languages from Sanskrit, in the same manner as Hindi, bengali and the other Gaurian dialects are directly derived from it, was certainly erroneous. (P. 43)

எது எப்படி இருந்த போதிலும் வடமொழியிலிருந்து திராவிட மொழிகளும், இந்தி வங்காளி போன்ற கௌரிய மொழிகளும் தோன்றியிருக்கக் கூடும் என்று கொண்ட பழங் குருட்டுக் கொள்கை நிச்சயமாகத் தவறான முடிபாகும்.

It was supposed by the sanskrit Pandits (by whom every thing with which they were acquainted was referrd to a Brahmanical origin) and too hastily taken for granted by the earlier European scholors, that the Dravidian languages though differing in many particulars from the north Indian idioms. were equally with them derived from the Sanskrit. (P. 41)

தங்களுக்குத் தெரிந்த ஒவ்வொன்றும் பார்ப்பனர்களிடமிருந்து வந்ததாகத்தான் இருக்க வேண்டுமென்று வடமொழி வாணர்கள் நம்பி வந்தார்கள். இதைக்கொண்டே அவர்கள் திராவிட மொழிகள் வடமொழியிலிருந்து எவ்வளவோ மாறுபட்டு இருப்பினும் வடமொழியிலிருந்து தோன்றியவை என்பதுடன் பண்டை ஐரோப்பிய ஆய்வாளர்களும் இதை எளிதில் நம்பி வந்தனர்.

.. and though they observed clearly enough that each language contained also many non-Sanskrit words and forms, they did not observe that those words and forms constituted the bulk of the language, or that it was in them that the living spirit of the language resided. (P. P. 41-42)

இருப்பினும் திராவிட மொழிகளில் வடமொழிக் கலப்பற்ற சொற்களும், மரபு மொழிகளும் பல உள என்பதையும் அங்குதான் அம்மொழிகளின் உயிர்நிலை அமைந்துள்ளன என்பதையும் கண்டறிந்து கொள்ளவில்லை,

தமிழாட்சி அமைப்போம்!

பட்டுக்கோட்டை, இராசேந்திரன்.

வருத்துகின்ற வடக்குவெறி நாய்கள் தொல்லை
வரைமீறிப் போயிற்றுக் கேட்பா ரில்லை!
திருத்தமிழ நாட்டுக்குள் இந்தி என்னும்
தீராத நோயொன்று பரவக் கண்டும்
பெருந்தமிழர் அத்திகோய்க் கிடங்கொ டுக்கும்
பெற்றியராய் ஆயினரே! இதனால் தான்அப்
பருத்ததொந்தி யார்நம்மை 'சீச்சி' என்று
பார்த்துநகைக் கின்றார்கள். உணர்ந்தோ மில்லை!

நன்றல்ல வடக்கர்கள்தம் வால்பி டித்தே
நம்மவருள் சிலபேர்கள் வாழ்தல் இங்கே
இன்றல்ல நேற்றல்ல பன்னா ளாக
இதுபோன்றே சிலர்வடவர் கைப்பா வைபோல்
என்னஅவர் சொன்னாலும் கேட்ட வாறே
இருக்கின்றார் இங்கிலையே வளரும் என்னில்
என்னாகும் தமிழ்நாடு? – தமிழர் மானம்?
இதையுணர்க தமிழ்காக்க எழுக-வெல்க!

மேனாட்டில் தான்முதலில் நாக ரீகம்
மிளிர்ந்ததென அவர்சொன்னார்! மேலும் இந்தி
தேனார்ந்த மொழிஎன்றார் தமக்கென் றோர்நல்
திருந்தாத மொழியுடையார்! மறவர் மக்காள்
வானார்ந்த நமதுபுகழ் கெடஉ ரைக்கும்
வஞ்சகர்பால் கூலிக்குக் கொடிபி டித்து
மேனாமி னுக்கிகள்போல் வாழ்தல் வேண்டாம்
மேலான தமிழாட்சி அமைப்போம் வாரீர்!

இயற்கை காட்டும் உண்மை!

குரு. மாரியப்பன், பி. ஏ., காரைக்குடி.

நேற்றிரவில் தீக்கனவால் நைந்த என்றன்
நெஞ்சப்பே ராற்றின்கண் துன்ப வெள்ளம்
சாற்றுவதற் கியலாப்பே ரிரைச்ச லோடு
சதிராடிச் சென்றதனால் தூக்கம் கெட்டேன்;
நாற்றிசையும் செங்கதிரோன் கதிர்பரப்பும்
நறுங்காலைப் போழ்தினிலே சோலை சென்றேன்;
ஏற்றியநல் மணிமுடிபோல் மலர்ந்த முல்லை
ஏளனமாய்ச் சிரிப்பனபோல் அசையக் கண்டேன்.

மலர்க்குலத்தில் உயர்ந்தவர்கள் தாமே யென்றோ
மங்கையரின் பற்குவமை தாமே யென்றோ
அலர்ந்தஎழிற் புறவிதழின் மென்மை யாலோ
அலைகாற்றில் பரவுமணத் தன்மை யாலோ
குலமடவார் கூந்தலினுக் குரியார் என்றோ
கோவில்அருச் சனைக்குத்தாம் முதல்வர் என்றோ
மலர்ந்தமுகச் சிரிப்பினிலே தொனித்த தம்மா!
மற்றிதுவோ அகங்காரச் சாயல்? – சென்றேன்.

கதிரோன்தன் கனலெழுப்பி ஆளும் வேளை;
கர்வமிகும் ஒளிமுல்லை மலரி தழ்கள்
உதிர்ந்துடலம் கருகிமெலிந் திருத்தல் கண்டேன்
"உள்ளத்தில் அகங்காரம் கொள்வோ ருக்(கு)
எதிரினிலே அழிவென்னும் நரகி ருக்கும்"
என்பதுவோ இதனுண்மை! – விளங்கும் ஞாலம்
புதிரனைய உண்மைகளைத் தனதி யற்கைப்
புலன்களினால் எடுத்தளிக்கும் தன்மை பாரீர்!

2, தமிழ் வட மொழியிலிருந்து சில சொற்களைக் கடன் வாங்கியது போலவே வடமொழியும் தமிழிலிருந்து பல சொற்களைக் கடன்வாங்கியுள்ளது என்பது பற்றி!

There is probably almost as large a proportion of Dravidian words in Sanskrit, as of British words in English: but this probablity has generally remained unnoticed. *(P. 566)*

ஆங்கில மொழியில் எவ்வளவு பிரிட்டிஷ் சொற்கள்உண்டோ அவ்வளவு திராவிடச்சொற்கள் வடமொழியில் உண்டு. ஆயின் அவைகள்கவனிக்கப் படாமல் அமைந்து கிடக்கின்றன.

Where any word was found to be the common property of the sanbrit and any of the Dravidian tongues. it was at once assumed to be a Sansbrit Derivative. (p. 566.)

வட மொழிக்கும் திராவிட மொழிகட்கும் பொதுவான ஒரு சொல்லை எங்கேனும் கண்டால் அதை உடனே வடசொல் என்று கூறிவிடுவது.

3. வடசொற்களைக் களைந்தபின் தமிழின் நீர்மை பற்றி:

Tamil can readily dispense with the greater part or the whole of its sankrit, and by dispensing with it rises to a purer and more refined styles whereas English connot abandon its Latin with out abandoning perspicuity.

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

பலி

வாய்என்பதன் அடியாகப் பிறந்த வாய்மை போலவும் மெய் என்பதன் அடியாகப் பிறந்த மெய்ம்மை போலவும், உன் என்பதன் அடியாகப் பிறந்த உண்மைபோலவும் கண் என்பதன் அடியாகப் பிறந்த கணம் போலவும், பல் என்பதனடியாகப் பிறந்தது பலி என்று அறிக. பலி-பல்லினால் வலிந்து உண்ணத் தகும் உணவுக்கும நாளடைவில் பல்வகை உணவுப் படையலுக்கும் வழங்கிற்று.

முதலில் விலங்கு முதலியவற்றை மூட வழக்கத்தால் தெய்வப் படிவங்களின் முன் வைத்து வெட்டிக் கொலை புரிந்தார்கள். அதைத் தெய்வங்களே நேரில் பல்லினால்கடித்து உண்டதாகச் சிறப்புறுத்தினார்கள்.

பின்னர் நாகரிகமிக்க தமிழர்களின் வெறுப்புக்கு அஞ்சி தெயவத்திற்குத்தருவன எவற்றையும பலி என்ற பெயராலேயே கூறத் தொடங்கினர் ஆரியப்பாவிகள். எனவே பலி தூயதமிழ்க் காரணப் பெயர் என்று கடைப் பிடிக்க.

தமிழ்மொழி தன்னிடத்துள்ள வடசொற்களில் பெரும் பகுதியையோ அல்லது முழுவதையுமோ நீக்கிவிட்டுத் தக்க தமிழ்ச் சொற்களை வழங்கிக் கொண்டார் அது தூய்மையும் நீர்மையும் பெற்றுச் செம்மைப் ப்ண்பு கொண்டதாகிவிடும்.

Tamil however the most high by cultivated of all Dravidian idioms. can dispense with its sanskrit altogether if need be, and not only stand alone but flourish without it said (p. 45.)

திராவிட மொழிகள் அனைத்திலும் மிகவும் திருந்திய பண்பட்ட நிலையிலுள்ள தமிழ்மொழியோ, வேண்டுமென்றால் வடசொற்களை முற்றிலும்அகற்றி தனித்தியங்கும் ஆற்றல் பெற்றிருப்பதோடன்றி அவற்றின் உதவி இல்லாமல் மேம்பட்ட வளமுற்று ஒளிரும் ஆற்றல் வாய்ந்ததாகும்.

4. பார்ப்பனர்கள் தமிழ்மீது கொண்ட வெறுப்பைப் பற்றி:

The only property these languages can have possessed in common must have been the contempt in which they were held by Brahmin philologists. (p. 5.)

(பலவற்றிலும் வேறுபட்ட பண்டைப் பாகத மொழிகளையும் "பைசாச பாதகம்" என்ற தொகுப் பிற்சேர்ப்பதற்கு) பொதுப்படையான காரணம் ஏதேனும் உண்டென்றால், அது பார்ப்பன மொழி வல்லார் அம்மொழிகளின்பாற் காட்டிய ஒரு சார்புபட்ட வெறுப்பே ஆகும்.

5. திராவிட மொழிகளின் ஆற்றல்பற்றி;

Neither English however. nor any other foreign tongue appears to have the slightest chance of becoming the vernacular speech of any portion of the inhabitants of southern India The indegenous Dravidan languages, which have maintained their ground for more than two thousand years against sankrit may be expected successfully ro resist the encroachment of every other tongue. (p. 3.)

ஆங்கிலமோ வேறெந்த அன்னிய மொழியோ எக்காலத்திலேனும் தென்னிந்திய உள்நாட்டு மொழியாக மாறிவிடக் கூடும் என்று கொஞ்சமும் நம்புவதற்கில்லை. வடமொழியைக் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக எதிர்நின்று போராடி வருவனவாகிய திராவிட மொழிகள் மற்றெந்த அன்னிய மொழியும் தம்மிடைத் தலை சிறவாதபடி எதிர்நின்று காத்துக் கொள்ளும் என்று எளிதில் நம்பலாம்.

6. தமிழ் நூல்களின் தன்மையை அளக்கும் அள்வுகோல் பற்றி:

Tamil poetical composition is regarded as an accordance with good taste and worthy of being called classical not in proportion to the amount of sanskrit it contains as would be the case in some other dialects; but in proportion of its freedom from sanskrit.

ஒரு தமிழ் நூலில் எவ்வெளவுக் கெவ்வளவு வட சொற்கள் குறைந்து காணப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அது சிறந்த நூலென்றும், எவ்வளவுக்கெவ்வளவு வடசொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அது தாழ்ந்த நூலென்றும் கருதப்படும்!

வெண்பா வினு விடை

வினு. முதலிரண்டு அடிகள். விடை. ஈற்றிரண்டடிகள்.

வினு: செ. பாலசுந்தரம், அரக்கோணம். விடை: சித்தன்

புத்தருக்குப் பின்னர் புதுக்கருத்து கண்டவரைச்
சித்தரே ஆராய்ந்து செப்பிடுவீர்? — வித்தகராம்
புத்தருக்குப் பின்னர் புதுமைக் கருத்தருள்வார்
° அத்தர் பெரியார் அறி!

° அத்தன் — தந்தை

வினு: அரங்கனுதன், புதுவை. விடை: சித்தன்

தமிழர்வீ ரத்திற்குத் தக்கதா யாய்ந்தே
அமிழ்தாங் குறளோன் றறைவீர்? — தமிழாகேள்!
கைவேல் களிற்றெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

வினு: ம. க. அன்பெழிலன், மதுரை. விடை: சித்தன்

தொன்மைத் தமிழ்மொழியைத் தூளாக்க இந்திவரின்
சின்ன கருங்குயிலென் செய்வாயோ? - அன்பா!
வலிகுன்றி யே,முதுமை வந்துபடுத் தாலும்
புலித்தலையை நாய்மோத்தல் இல்.

வினு: தகட்டூர், மா. இராமலிங்கம். விடை: பா. மு.

விறலிவிடு தூதே விளங்குதமிழ் நூலில்
சிறந்ததென்று செப்பல் சரியா? - அறிந்தோர்
தமிழ்வளத்தைக் கூறும் தமிழ்விடுதூ தைத்தான்
அமிழ்தென் றறைவார் அறி!

வினு; க. இராமசாமி, பள்ளிப்பட்டி. விடை: பா. மு.

காக்கைக்குத் தாய்குயிலா? அன்றிக் குயிலின்தாய்
காக்கையா? குஞ்சு பொரிப்பதெது? - காக்கையின்—
சேக்கையில் சென்றுகுயில் முட்டையிடும்; குஞ்சுகளைக்
காக்கை பொரிக்குமெனக் காண்!

வினு: கோ. சோ. செயபால், நல்லூர். விடை: பா. மு.

கலைகலை என்றே பிதற்றிக் கலையைக்
கொலைசெய்தே வாழும் கொடியோர் — நிலைசொல்?
கலையுயரப் பேசியே காசுபணத் தால்தம்
நிலையுயர எண்ணுபவர் நேர்!



அப்போது!



இப்போது!

புதுவைத்
திருவாளர் தெ. பசவலிங்கனார்
மனமாறுதல்.

குயில், விடுதலை ஆசிரியர்கட்குத் தெரிவிப்பதாவது:

என் தந்தையார் பசவலிங்கனார்க்கு 81-ஆண்டு நிறைகின்றது. வைதிக ஒழுக்க நெறியே நன்றெனக் கடைப்பிடித்து வந்தவர். காவி உடையே அணிபவர்; அவர் மார்பில் இலிங்கம் பொறித்த வெள்ளிச்செச்சை தொங்கிக்கொண்டிருக்கும். அவ்விலிங்கத்திற்கு நாடோறும் இருவேளை பூசைகள் செய்தே உணவுண்ணுவார். சட்டையிடுவதே இல்லை.

இப்போது அவர் தம் கொள்கையை அடியோடு மாற்றிக் கொண்டார். இலிங்கச் செச்சை கழற்றப் பெற்றது. சிவபூசையை மறந்தார். சிவ சிவ என்று எப்போதும் முணுமுணுக்தம்வாய், தமிழ்தமிழ் என்று முழக்கமிடுகின்றது. இன்றைய மாதிரியில் மெல்லிய வெண்சட்டை அவர் உடலை அழகுசெய்கின்றது.

இம் மதப்பற்று எனும் நச்சுமர வீழ்ச்சிக்குக் காரணம். தந்தை பெரியாரவர்களின் தூய கருத்து விளக்கச் சூராவளியே யாகும்.

இதுவுமன்றி என் தந்தையார்க்குள்ள கல்வி கேள்விகளும் நேர்மையும் அவர் மனம் மாறும்படி துணைபுரிந்தன வெனினும் அமையும்.

என் தந்தையார் அப்போதும், இப்போதும் ஆகிய உருவப்படத்தையும் மேலே நோக்குக.

இங்ஙனம்

ப. கனகலிங்கம்.

"பிரிவும் பரிவும்"

புலவர், வீரராகவன், மேலக்குப்பம்.

பொருள் தேடப் போவதென்று
பூவையே! புறப்பட்டானே – பொறுக்குமா?
உள்ளம் மறக்குமா?

அன்றெனைக் கண்ட போதில்
ஆவலைத் தூண்டிமெல்ல – அணைத்தான்
உடம்பிலும் பிணைத்தான்.

இன்றெனைத் தனியில் விட்டே
ஏங்கியே வாடக்கண்டும் – செல்வான்
நன்றே சொல்வான்.

படுக்கை யறையிற் கையும்
பாவையே நீங்கிவிட்டால் – பார்ப்பான்
உடலும் வேர்ப்பான்.

வடுக்கள் மறைய வில்லை
வளரன்பு மாறவில்லை – ஏடி
பொருளுந் தேடி,

போதுஞ் சரியோ சொல்லு
பூத்த மலர்வா டிடுமே – புகழ்வா
இதனால் இகழ்வா?

வேண்டாம் பொருளும் வேண்டாம்

இலங்கும் பவள வாயில்
விளங்கும் முத்தினிடையே – ஊறும்
மணம் நாறும்

இனிய பாலி னொடு இன்பங் குறையாமலே
தனியிற் கலந்து தருந் – தேனே
அதுவும் நானே

முப்பழஞ் சருக்கரையு முழுங்குஞ் செந்தமிழுடன்
ஒப்பியே சேர்ந்துரைத், திட்ட – மருந்து
உண்டு திருந்து

இனிய அழகுடனே இளமை குறையாமலே
இணையப் பருத்துவரும் – கொங்கை
மலர்ச் செங்கை

இளமை குறையுமுன்னே கடமையுணர்வுகொண்டு
இருவரும் ஒன்றுசேர்ந்த – இன்பம்
பிரிவுத் துன்பம்

அழிந்த இளமையுமே அன்பருடன் கூடியே
அகமகிழ்ந்திட இங்கே – வருமா?
பொருள்போல் தருமா?

வேண்டாம் பொருளும் வேண்டாம்

இன்பம் பெறத் துடிக்கும்
இளமை அழகுடையாள் – ஏங்க
கண்கள் வீங்க

இறந்து விடவும் நீங்கள்
இன்பமாய்ப் பொருளுங் கொண்டே
முடிந்தால் மறுங்கள். [– இருங்கள்

சுதந்திரம் வேண்டுமடா!

திருவையாறு, தமிழ்த்துளி.

வேண்டும் சுதந்திரம் வேண்டுமடா! – நாம்
வேண்டும் சுதந்திரம் வேண்டுமடா!

மேழிபிடித்துயர் வானபொருள்விளைத்
தூறுபசிப்பிணி யோட்டிடவும் – பேர்
ஆழிகடந்துடல் ஆவிகொடுத்துயர்
வானதமிழ்க்குடி வாழ்திடவும்
(வேண்டும்)

வீரத்தமிழ்க்குடி வாழும்நிலம்இனி
மேலுந்தனியர சாண்டிடவும் – நம்
பேரைமறைத்துயர் வாகநினைத்திடு
பேயின்தலையறுத் தாண்டிடவும்
(வேண்டும்)

தூறுமிகப்பனி மூடியுயர்மலை
தூயதமிழ்தனைப் போற்றிடவும் – தமிழ்
ஆறுமிகப்பல ஆண்டுநிலைத்துயர்
வாகத்தமிழ்மொழி வாழ்ந்திடவும்
(வேண்டும்)

முக்கிய அறிவிப்பு

ஒருசில பத்திரிக்கை விற்பனையாளர்களுக்கு, குயில் இதழ் அனுப்புவதை நிறுத்தியும், அவர்கள் தங்கள் பாக்கிப் பணத்தை இதுவரையில் அனுப்பாமல் இருக்கிறார்கள். இவர்கள் பத்திரிக்கை வளர்ச்சிக்கே தடையானவர்களாவர். விரைவில் இத்தகையோரின் பெயர்கள் தொடர்ந்து குயிலில் வெளியிடப்படும். அல்லாமலும், அவர்கள் மேல் தக்க நடவடிக்கையும் எடுக்கப்படும்.

– அமைச்சர்

எழுமின் இன்றே!

மேமாத்தூர். சௌ. வாசுதேவன்.

குடிமகன் ஒருவன் உயிர்தனை அந்தோ
கொன்றவன் காரணமின்றி
படிதனில் வாழ்தல் குறைஎன மன்னன்
பாரினில் வீழ்ந்துயிர் விடுத்தான்
குடிமகன் உயிர்க்கு மன்னவன் உயிரை
கொடுத்தஇம் மறத்தமிழ் நாட்டில்
குடிமக்களாட்சி கொஞ்சம் கொஞ்சமாய்க்
குறைத்தும்ஓர் உயிர்தனை வீணில்
குடித்திடக் காணும் காட்சியைக் காணக்
குமைகின்ற தமிழர்தம் உள்ளம்

வானொலி என்ற அழகிய தமிழை
விடுத்தும்ஆ காஷ்வாணி என்றே
நாணமேயின்றி அழைப்பதால் இந்த
நாட்டைஆள் மன்னர்கள் தமக்குக்
காணும்ஓர் நன்மை என்னவென்றிங்கே
கழறிடக் கூடுமோ நவில்வீர்
வீணராம் வடவர் அடிமையாய் வயிறு
வளர்ப்பதால் பெருமைவந் திடுமோ ?

அரங்க ரேத்தினமாம் என்றஓர் செம்மல்
அழிந்திடக் கண்முனல் கண்டும்
அரங்கமேல் இருக்கும் ஆளவந் தோனே
அகங்கார மாய்வாழ் கின்ருய்
குரங்கின்கை பட்ட மாலைபோல் தமிழர்
குலைந்துகண் ணீர்வடிக் கின்ருர்
நிரந்தர மல்ல தமிழர்தம் உறக்கம்
நீஇதை நிச்சயம் அறிவாய்!

அய்யகோகொடுமை ஆற்ருெணுக் கொடுமை!
அடலே றெனஎழுந் திடுவீர்?
செய்கையே இன்றி இறகெனக் கேட்டால்
சிந்திடா தென்றுமே மயில்தான்
மெய்யல வாழ்வு மிருகத்தின் கீழாய்
மாய்தலும் வாழ்தலும் ஒன்றே!
நொய்தினி லெழுந்து நடத்துவீர் புரட்சி
நம்மனோர் வாழிய என்றே.

தமிழர்களே! நிமிர்ந்தெழுந்தால் தரணியிலே,
நமக்கெ திர்தான் உண்டோ!
அமிழ்தினிலே இனிய தமிழ்தனைக் காக்க
ஆருயிர் தந்திட வேஎழுமின்
வழிகாட்டி அங்கொருவன் வாடு கின்ருன்,
உயிர்ஊச லாடுவ தைஅறிவீர்
தமிழ்மூச் சென்றும வாழ்வென்றும்
— சொல்வது நிசமென்ருல்
எழுந்திடு வீர்தமிழ் காக்கஇன்றே!

என்தலைவர் ஈ. வெ. ரா.

கா. சம்பத்து, மதுக்கூர்.

"புதுவாழ்வு பெறவேண்டும் தமிழர்" என்னும்
பொன்ஞன கொள்கையினை உடையார்; இந்து
மதத்தாலே, பார்ப்பனரால் தமிழ கத்தின்
மக்கட்கு நேர்ந்தஇன இழிவை நீக்க
எதுசெய்ய வேண்டுமோ அதையே செய்யும்
இயல்புடையார்; மனநல்லார்; நரைத்த தாடி
முதுகிழவர்; தனித்தலைவர்; தமிழ் இ னத்தின்
முன்னேடி; வழிகாட்டி; பெரியார் என்பேன்

'என்கடமை சமுதாயத் தொண்டு செய்தல்'
எனநினைப்பார்; கொளைகயினை விளக்கிச் [சொல்வார்
சென்னபடி செயல்புரிவார்; போராட் டங்கள்
தொடர்ந்துசெயும் துணிவுடையார்; அதுவு மன்றித்
தன்நாட்டைத் தாய்நாட்டைத் தமிழர் நாட்டைத்
தமிழ்மகனே தனியாட்சி செய்ய வேண்டும்
என்னும்விடு 'தலைவேட்கை' உடையார் தம்பி!
என்தலைவர் ஈ. வெ. ரா. வாழ்க அன்னுர்!

★○★

சாவு மணி.

தஞ்சை, எழிலன்.

காந்தி இருக்குங்கால் காலெடுத்து வைத்துநம்
சாந்தி தனையழிக்கும் சாதிக்கும்,— காந்தியம்
தாங்கித் தவங்கிடக்கும் தாசர்க்கும், சாவுமணி
ஓங்கி யடித்திடு வோம்.

∞★∞

கட்டண விவரம்

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு.
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் பதினைந்துகாசு (0-15) அஞ்சல் தலைகள் அனுப்புக.

குயில்

Regd No. M. 7030

தமிழக முதலமைச்சர்

திரு, காமராசனார்

5-2-59ல் புலவர் **குமாரசாமி** அவர்கட்குப்

பொன்னாடை போர்த்துப் பொற்கிழி உதவிப்

பாராட்டுரை நிகழ்த்துகின்றார்.

ஆசிரியர், வெளியீடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.

அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.